Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 11 26 - 07 - 1992 ஞாயிற்றுக்கிழமை ஓசை 159

## கலைபண்பாட்டு கழகத்தின் அரும் பொருள் காட்சியகம்

அண்மையில் நடைபெற இருக்கும் தமிழீழ தொழில்வளக் கண்காட்சி தொடர்பாக விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழகம் தமிழீழ மக்களுக்கு வேண்டுகோள் ஒன்றைவிடுத்துள்ளது. அவ்வேண்டுகோளில், அண்மையில் நடைபெறவிருக்கும் தமிழீழ தொழில்வளக் கண்காட்சியில் எமது கலை, பண்பாடு, இலக்கியங்களின் பழைமையையும், தோற்றப் பொலிவையும், சிறப்பையும் உள்ளடக்கிய தனிப்பகுதிஒன்றை அமைத்து மக்கள்பார்வைக்குவைக்க விடுதலைப்புலிகள் கலை. பண்பாட்டுக் கழக நடுவப் பணியகம் கண்காட்சி அமைப்பாளர்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. எனவே எமது காட்சியகத்தில் வைப்பதற்கான பழைமைவாய்ந்ததும், பெறுமானமுள்ளது மானமரத்தில், உலோகத்தில், கல்லினாலானசிற்பங் (4ஆம் பக்கம் பார்க்க)

# இனக்கலவரத்தை தூண்டிவிட அரசு முயற்சி; முஸ்லிம்கள் கொலை இதையேகாட்டுகின்றன

## கிழக்கு நிலை குறித்து பி.பி.ஸி.

(லண்டன்)

இனங்களுக்கு இடையில் மோதலை உருவாக்குவதன் மூலம் நாட்டில்பதற்றத்தை ஏற்படுத்தி அரசியல் இலாபம்தேட ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கம் முற்படுவதாக பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

சிறிலங்கா இராணுவத்தினரின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ள பிரதேசத்திலேயே கடந்த 19 ஆம் திகதி முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டுள்ளமையால் அரசே இப்படுகொலையின் சூத்திரதாரி என முஸ்லிம் காங்கிரஸ் கருதுகின்றது. இதன் காரணமாக இக்கொலைகள் பற்றி அமைக்கப்பட்ட விசாரணைக்குழுவில் சுயாதீன முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு இடமளிக்க வேண்டும் எனவும், இக்கொலைகளுக்கு விடுதலைப் புலிகளே காரணம் என முன்கூட்டியே ஊகம் செய்யக் கூடாது எனவும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் எச்சரித்துள்ளார்.

இதேவேளை வாழைச்சேனைக்கு அண்மையில் புகையிரதம் வழிமறிக்கப்பட்டு முஸ்லிம்கள் கொல்லப்பட்டபோது புகையிரதப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அங்கே இருந்துள்ளார்கள். ஆனால் அவர்கள் அதைத் தடுகக முற்படாதது இக்கொலைகள் அரசின் திட்டமிட்ட செயல் என்பதையும், கிழக்கில் தமிழருக்கு எதிரான ஒரு வன்செயலை அரசு விரும்புகிறது என்பதையுமே இச்சம்பவங்கள் புரியவைப்பதாகப் பி.பி.ஸி தெரிவிக்கின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தம், அவசரகாலச்சட்டம் தொடர்பு எதுவுமில்லை

### தொழிற்சங்கம் விமர்சனம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் நடைபெறும் உள்நாட்டு யுத்தநிலைமைகளுக்கும் அரசு பிரகடனப்படுத்தியிருக்கும் அவசரகாலச் சட்டப் பிரமாணங்களுக்கும் எவ்விதசம்பந்தமும்கிடையாது என்று சி. எம். யு பொதுச் செயலாளர் பாலா தம்பு ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அரசின் அத்தியாவசிய சேவைகள் பிரமாணம் சர்வதேச தொழில் ஸ்தாபன சட்டம் இல: 89 க்கு முரணா

அவசரகாலச் சட்டவிதிகள் கட்டடம் கட்டுதல், பிரசுர உரிமை, ஆர்ப்பாட்டம் செய்தல், வேலை நிறுத்தத்தில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியின் செயற்பாடு மீண்டும் தலைதூக்கலாம்

### –சிறில் ரணதுங்கா எச்சரிக்கை

(கொழும்பு)

ஜே. வி. பியினரின் தீவிரவாத வன்செயல்கள் மீண்டும் தலை தூக்கும் அபாயம் ஏற்

கூறியுள்ளார்.

கொழும்பில் பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும்

## பஸ் மீது கிரனைட் வீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் இருந்து புதன் பிற்பகல் பாதுகாப்புடன்பிரயாணிகளை ஏற்றிச் சென்ற பஸ்கள்மீது காத்தான் குடியில்வைத்து கிரனைட் வீசப்பட்டது எனினும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

## 15 ஆம் திகதி கப்பல் வரலாம்

(யாழ்ப்பாணம்)

அத்தியவசிய உணவுப்பொருள்களுடன் அடுத்த மாதம் 15 ஆம் திகதி கொழும்பில் இருந்து கப்பல் ஒன்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

## வீரவணக்கம்

### வீரவேங்கை சபாபதி

21 - 07 - 1992 அன்று மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் மாரடைப்பால் சாவடைந்தார். வீரவேங்கை சபாபதி [தயா

## யாழ். மருத்துவக்கல்லூரிமாணவர்கள் கொழும்பில் பொலிசாரால் கைது

(கொழும்பு)

வடகொழும்பு மருத்துவக் கல்லூரியில் பரீட்சை எழுதச் சென்ற நான்கு யாழ். மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சிறிலங்கா இரகசியப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அங்கு நடைபெற்ற இரண்டாவது ஆண்டு மருத்துவப் பட்டப்பரீட்சையைஎழுதிவிட்டு வெளியே வந்த மாணவர்களே இவ்வாறு கைதாகியுள்ளதாக தெரியவருகிறது.

நேற்று முன்தினம் காலை 11 25 மணியளவில் ராகமவிலுள்ள கல்லூரியின் பிரதான வாசலில் வைத்து கைதுசெய்யப்பட்ட இவர்கள் வானில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

இச் சம்பவம் பற்றி கல்லூரி நிர்வாகம் உயர்கல்வி அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வந்தது அமைச்சர் ஹமீது பொலிஸ்மா அதிபருடன் தொடர்பு கொண்ட போது கைதுசெய்யப்பட்ட மாணவர்களில் ஒருவர் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முக்கிய உறுப்பினர் ஒருவரின் நெருங்கிய உறவினர் என்றும், ஏனைய மூவரும் விடுதலை செய்யப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டதாம்.

யாழ். பல்கலைக்கழகத்தில் பரீட்சையை நடத்த முடியாததினால் அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் வடகொழும்பு மருத்துவக்கல்லூரியில் இப்பரீட்சை நடத்தப்பட்டது.

கடத்தப்பட்ட நான்கு மாணவர்களும் பரீட்சை எழுதுவதற்கென யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்றவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

## உலக திருச்சபை உப தலைவர் புதனன்று யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

உலக திருச்சபையின் உப தலைவர் பிரியங்கா மெண்டிஸ்சும், குவேக் கேக்ஸ பீஸ் அமைப்பினைச் சேர்ந்த அமர அம்பு ஆராச்சியும் புதனன்று யாழ் பாணம் வரவுள்ளனர்,

வடக்கில் நடைபெறும்

தெரிவிக்கப்படுகிறது.

உலக திருச்சபையின் புதிய உப-தலைவராகிய பிரியங்கா மெண்டிஸ் அண்மையில் தெரிவு செய்யப் பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## காஸ் சிலிண்டர் வெடித்து ஒருவர் பலி 9பேர் காயம்

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அரசின் அத்தியாவசிய சேவைகள் பிரமாணம் சர்வதேச தொழில்" ஸ்தாபன சட்டம் இல: 89 க்கு முரணானது என்றும் பாலா தம்பு அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

—சிறில் ரணதுங்கா எச்சரிக்கை

(கொழும்பு)

ஜே. வி. பியினரின் தீவிரவாத வன்செயல்கள் மீண்டும் தலை தூக்கும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு செயலாளர் ஜெனரல் சிறில்ரணதுங்கா கூறியுள்ளார்.

கொழும்பில் பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் கலந்து கொண்ட மாநாட்டில அவர் மேலும் கூறு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியின் நடத்தையில் கூட்டுப்படை அதிருப்தி

(கொழும்பு)

கம் உதாவ விழாவில் முதலுதவிவசதிகளை கவனிப்பதற்காக இராணுவ மருத்துவர்கள் அங்குஅனுப் வைக்கப்பட்டது தொடர்பாகக் கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகம் அதிருப்தி அடைந்திருப்பதாக தெரிவிககப்படுகிறது.

அண்மையில் மொனராகலை மாவட்டம் புத்தளையில் இடம்பெற்ற கம்உதாவ விழாவிற்கு இராணுவ மருத்துவர்கள் அனுப்பப்பட்டார்கள்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுக்கு கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகப் பொறுப்பதிகாரி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா எழுதியுள்ள கடிதத்தில், இராணுவ மருத்துவர்கள் புத்தளை கம் உதாவ விழாவிற்கு அனுப்பப்பட்டது தொடர்பாக ஆ- சேபனையையும், கவலையையும் தெரிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

# சிறிலங்கா அரசுக்கு எதிராக கறுப்பு வாரம் அனுஷ்டிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா அரசிற்கு எதிராக கறுப்பு வாரம் ஒன்றை நடத்தஎதிர்க்கட்சிகளின்கூட்டு முன்னணி திட்டமிட்டுள்ளது.

சிறிலங்காவில் அரசினால் மக்கள் படும் துன்பதுயரங்களை உலகிற்கு வெளிக்காட்டும் நோக்குடனேயே இக்கறுப்பு வாரம் அனுஸ்டிக்கபடவுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோபண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

அடுத்தவாரம் மாத்தறையில் இது தொடர்பாக நடைபெறவுள்ள கூட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள ஏனைத்து மக்களையும் கறுப்புடை அணிந்து வருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இதற்காக ஓட்டப்படவுள்ள விளம்பரங்கள் அனைத்தும் கறுப்பு நிறத்திலேயே அச்சிடப்படவுள்ளதாக இதன் அமைப்பாளர்கள் பி.பி.ஸிக்கு தெரிவித்துள்ளனர்.

# 4000 குடும்பங்கள் அடிப்படை வசதியின்றி அவதி

அண்மைக் காலங்களில் வலிகாமம் வடக்குப் பகுதியிலும் கட்டைக்காடு வெற்றிலைக்கேணி பகுதிகளிலும் இருந்து இடம்பெயர்ந்த சுமார் நாலாயிரம் குடும்பங்கள் போதிய அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வருகின்றனர்.

வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்குப் பகுதிகளில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளில் பத்தாயிரம் வரையான குடும்பங்கள் இடம் பெயர்ந்திருந்தன. இவர்களில் மூவாயிரத்து ஐந்நூறு குடும்பங்கள் இடம் பெர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ளனர்.

கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் 500 குடும்பங்கள் முகாம்களில் தங்கியுள்ளனர். இவர்கள் அரசசார்பற்ற நிறுவனங்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இருப்பினும் அடிப்படை வசதிகளான சுகாதாரம் மருத்துவ வசதிகளின்றி இவர்கள் கஷ்டங்களைஅனுபவித்து வருகின்றனர்.

21 - 07 - 1992 அன்று மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் மாரடைப்பால் சாவடைந்தார். வீரவேங்கை சபாபதி [தயாநிதி - சின்னையா சின்னத்தம்பி கிரான், மட்டக்களப்பு] என்ற போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

சும், குவோக் கேக்ஸ பீஸ் அமைப்பினைச் சேர்ந்த அமர அம்பு ஆராச்சியும் புதனன்று யாழ் பாணம் வரவுள்ளனர்,

வடக்கில் நடைபெறும் போரினால் ஏற்பட்டுள்ள அனர்த்தங்களையும், மக்கள் படும் கஷ்டங்களையும் நேரில் கணடறிவதற்காகவே இவர்கள் தமது யாழ்ப்பாணவிஜயத்தை மேற்கொண்டுள்ளனர என்று

தேசிய தொழில் நுட்ப

# டிப்ளோமா கற்கைநெறி விண்ணப்பங்கள் கோரல்

தேசிய தொழில் நுட்ப கற்கை நெறியில் டிப்ளோமாவுக்கான விண்ணப்பங்கள் மொறட்டுவ பல்கலைக்கழகத்தால் கோரப்பட்டுள்ளது. ஆங்கில மொழிமூலம் நடத்தப்படும் இக் கற்கை நெறியில் ஒன்பது துறைகளுக்கான விண்ணப்பங்கள் பதினேழு வயதுக்கும் இருபத்து நான்கு வயதுக்கு இடைப்பட்ட க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்தவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன. இதற்கான வர்த்தமானி அறிவித்தல் கடந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

# க. பொ. த. (உ/த) பரீட்சை வினாத்தாள் நாளை வரும்

[நமது நிருபர்]

ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ள க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் நாளை விமானம் மூலம் இங்கு எடுத்துவரப்படவுள்ளதாக பிரதேசக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

கல்விப்பணிப்பாளரால் கொழும்பிலிருந்து பலாலிக்கு விமானம் மூலம் எடுத்துவரப்படும் இந்த வினாத்தாள்கள் அங்கிருந்து கப்பல் மூலமாக பருத்தித்துறைக்கு கொண்டுவரப்பட்டு அங்கிருந்து தரை மார்க்கமாக குடாநாட்டிற்குள் எடுத்துவரப்படவுள்ளது.

புளை கொத்தணிக்கு உட்பட்ட பரீட்சை நிலையங்கள் யாழ்ப்பாணத்திலுள்ள திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திற்கு மாற்றப்படிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# வெலிக்கடைப் படுகொலை நாளை நினைவுக் கூட்டம்

மனித நாகரீகத்திற்கு அப்பாற்பட்ட வகையில் உலகில் எங்குமே நடைபெற்றிராத வெலிக்கடைச் சிறைச்சாலையில் அரசியல் கைதிகளாக இருந்த 53 தமிழ் போராளிகளையும், பொதுமக்களையும் சிங்களப்படையினரும், குண்டர்களும் சேர்ந்து1983ஜூலை 25,27 ஆம் திகதிகளில் கோரமாகக்கொன்று குவித்துஇன்று எட்டு ஆண்டுகள் கடந்து விட்டன. இவ்வாறு விடுதலைப் புலிகள் அரசியற்துறை யாழ் மாவட்ட செயலகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது;

தமிழர்களின் நெஞ்சங்களையும், உலகத்தின் மனச்சாட்சியையும் உசுப்பிவிட்டதே இந்தப் படுகொலை நிகழ்வுதான். வெலிககடைச் சிறையில தங்கள் இன்னுயிரை ஈந்த விடுதலைப் போராட்ட முன்னோடிகளான தங்கத்துரை, குட்டி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# காஸ் சிலிண்டர் வெடித்து ஒருவர் பலி 9பேர் காயம்

—திருக்கோணமலையில் சம்பவம்

(திருக்கோணமலை)

திருகோணமலையில்மணிக்கூட்டுக் கோபுரத்துக்கருகில் காஸ் சிலிண்டர் வெடித்து ஒருவர் கொல்லப்பட்டார் ஒன்பதுபேர் படுகாயமடைந்தனர்

காயமுற்றவர்களில் இருவர் இராணுவத்தினர் என்று கூட்டுப்படைத் தலைமையக பேச்சாளர் ஒருவர் ஊர்ஜிதம் செய்துள்ளார்.

# அழிஞ்சி பொத்தானையில் காவலரண்மீது தாக்குதல்

(மட்டக்களப்பு)

பொலநறுவமாவட்டம் அழிஞ்சிப்பொத்தான இராணுவ பொலிஸ் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த புதன்கிழமை இரவு 7·15 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றதாகவும், இத்தாக்குதலைச் சமாளிக்க வேறு இடத்திலிருந்து படையினரை வரவழைக்கவேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# சிறிலங்கா இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு ஆரம்பம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின் காலாட்படைகளுக்கு ஆட்களைத் திரட்டும் வேலை கடந்த திங்கள் முதல் ஆரம்பமாகியுள்ளது.

கொழும்பிலும், மாகண இராணுவ தலைமையகங்களிலும் கடந்த திங்கள் ஆரம்பமான நேர்முகப்பரீட்சைகள் நேற்று முன் தினம் வரை தொடர்ந்தது.

புதிதாக இராணுவத்திற்கு சேர்க்கபபடவுள்ள ஆட்களின் எண்ணிக்கையை வெளியிட சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் மறுத்து விட்டன. எனினும் ஜூன் 1990சகுப் பின்னர் படையினர் சந்தித்த இழப்புக்களுக்கு ஈடுசெய்யும் வகையில் பெருமளவில் ஆட்சேர்ப்பு இடம்பெறும என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அதிக விலைக்கு விற்கப்பட்ட தேங்காயெண்ணை பறிமுதல்

சாவகச்சேரி வர்த்தக நிலையமொன்றில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்ட தேங்காயெண்ணெய் காவற்றுறையினரால் பறிமுதல் செய்யப்பட்டு மருதடிச்சந்தியில் வைத்து பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

இதேவேளை தமிழீழ காவற்றுறையினரால் சாவகச்சேரி நவீன சந்தைப் பகுதியில் சில தினங்களுக்கு முன்பு பதுக்கல் வியாபாரிகள் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து தட்டுப்பாடான பொருள்கள் சாவகச்சேரியில் தாராளமாக விற்பனை செய்யப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. 35

**வீணாகும் தண்ணீர் - நம் வாழ்நாளின் கண்ணீர்**

## வரி விளம்பரம்

**புதிய மீரா நாவல்**

காலத்தைப் பிரதிபலிக்கும் கதைகள், சமுதாயப் பிடிப்புள்ள கதைகள் மீரா பிரசுரங்களாக இப்பொழுது வெளிவருகின்றது. ஐந்து நூல்களை வாங்கினால் ரூபா ஐம்பது பெறுமதியான மீரா பிரசுரம் அன்பளிப்பாக வழங்கப்படுகிறது. [2875]

**ENGLISH COURSE**

(ஒருங்கமைந்த ஆங்கிலப் பயிற்சி)

*ENGLISH GRAMMAR WITH SPOKEN ENGLISH BY KANDASMY*

மூன்றுமாதத்தில் ஆங்கிலம் பேசப் பயிற்றப்படுகிறது. 87, திருநெல்வேலி றோட், (பாலத்திற்கு அண்மையில்) கொக்குவில். (2884)

**பாலர் ஆசிரியர்**

பாலர் ஆசிரியர் பயிற்சி விரைவில் ஆரம்பமாகிறது க. பொ. த. (சா/த) கடைசித் தகைமையாகும். நேரில்வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம் பாலர் ஆசிரியர் சங்கம் மே / பா உயர்கலைக் கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (2845)

**ஜோதிட விஞ்ஞானம்**

எண்ஜோதிடம், விவாகப் பொருத்தங்கள், ரேகை சாஸ்திரம் ஜனன ஜாதகங்கள் பார்வையிட தினமும் காலை 9.00 மணிக்கு முன் நேரில் சந்திக்கலாம்: *Prof.* சததியதாஸன் *Mech. E. Elec E.* [பத்து வீட்டுத் திட்டம்] கட்டுடை. (2893)

**ஸ்ரீ கருமாரி சோதிட நிலையம்**

உங்களின், உங்கள் குழந்தைகளின்நிகழ்கால, எதிர்கால பலன்களைஅறிய நாடுங்கள். அன்னை ஆதிசக்தி ஸ்ரீதேவி கருமாரியின் அருள் பெற்ற சோதிடர் அம்பிகைதாஸ் அவர்களை. தும்பளைமேற்கு (ஸ்ரீ சாரதா தேவி ஆச்சிரமத்திற்கு அருகில், தபால் பெட்டிச் சந்தி), பருத்தித்துறை. (2895)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து நுண்கலைப் பேராசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் 1992-09-25 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்: ரூபா 12,200-6x300-14,000/- [மாதமொன்றுக்கு]

யாழ்ப்பாணப்பல்கலைக் கழக தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப் படுதல் வேண்டும். தபால்மூலம் படிவங்களையும் இதர விபரங்களையும் பெற விரும்புபவர்கள் 23x 10 சதம மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு ரூபா 2/- முத்திரை யொட்டப் பெற்ற தபால் உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தம்து நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும்அல்லது அனுபவத்தையும் கவனத்தில் கொண்டு சம்பளஅளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

1992-07-24

[சி/4768]

---

## கலையரசு நூற்றாண்டு விழா

மானிப்பாய் கலையரசு கலைக்கழக நாடகப் பயிற்சிக் கல்லூரி யாழ் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தும் கலையரசு சொர்ணலிங்கம் நூற்றாண்டு விழா மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இன்று காலை 9.00 மணியளவில் ஆ. கல்யாணசுந்தரேசன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

### விண்ணப்ப முடிவு நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

எழுதுனர் சேவைக்கும் அதனோடு இணைந்த சேவைகளுக்கும் ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி நீடிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த மாதம் 7 ஆம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

### கட்டாக்காலி நாய்கள் தொல்லை

(யாழ்ப்பாணம்)

நவாலியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை பெருமளவில் அதிகரித்து இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக நவாலி வடக்குப் பகுதியிலேயே நாய்களின் தொல்லை அதிகரித்து இருப்பதாகவும் கடந்த வாரத்தில் மட்டும் 9 பேர் நாய் கடியினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் நாய்களின் தொல்லை தொடர்பாக மகளர் மானிப்பாய் கிராம சபையிடம் புகார் தெரிவித்துள்ளனர். (05)

### இந்திய மீனவர் மீது சிறிலங்கா கடற்படை சூடு

(சென்னை)

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் சென்ற போது சிறிலங்கா கடற்படை சூட்டில் ஆறு பேர் காயமடைந்தனர். மீனவர்கள் விசைப் படகில் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் நான்கு மீனவர்கள் இராமநாதபுரம் தலைமை மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டனர். இரண்டு மீனவர்கள் பற்றித் தகவல் எதுவும் தெரியவில்லை.

---

## 1ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

★ ★ ★



★ ★ ★

### லெப். மணிவண்ணன் (அன்ரனி)

( மேரி ஜோசப் பிரான்சிஸ் சேவியர் )

வீரஜனனம்: 19 - 06 - 1970 வீரச்சாவு: 26 - 07 - 1991

மன்னார் மண் ஈன்ற மணி வண்ணா<br>
மக்கள் மானம் காக்க வந்த மறவா<br>
வீறு கொண்டு எழுந்து வந்த வீரன் - நீ<br>
விதையானாய் விடுதலைக்காய் மண்ணில்<br>
ஆண்டொன்று ஆனதையா இன்றுடன்-நீ<br>
ஆனையிறவில் மாவீரன் ஆகியே<br>
அணையா ஜோதியான மணிவண்ணா-நின்<br>
நினைவுகள் நீங்கிடுமோ எம் நெஞ்சைவிட்டு

ஆனையிறவில் இவருடன் வீரச்சாவடைந்த சகபோராளிகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்,

தென்மராட்சி, (2865) உறவினர், நண்பர்கள்

---

## பதவி வெற்றிடங்கள்

பிரபல்யமான நிறுவனம் ஒன்றினால் பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கணனி [நிரைப்படுத்துனர்] [COMPUTER PROGRAMMER]
2. தரவு - நிரைப்படுத்துனர் [DATA ENTRY OPERATOR]

மேற்குறிப்பிட்ட பதவிக்கான தகைமைகள்

(அ) க. பொ. த [உயர்தரம்]

(ஆ) ஏதாவது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

**விண்ணப்பங்கள்:-**

விளம்பர இலக்கம் 161<br>
மே/பா, ஈழநாதம்<br>
31, மகேந்திரா வீதி,<br>
யாழ்ப்பாணம், என்ற முகவரிக்கு 02-08 1992 க்கு முன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(சி/4759)

---

## மாகா.சபை உறுப்பினர்மீது முதலமைச்சர் தாக்குதல்

(அநுராதபுரம்)

வடமேல் மேல் மாகாண முதலமைச்சர் ஜி.டி. மகிந்த சோமாவுடன் இரு பொலிசாரும் சேர்ந்து இரண்டு வடமேல் மாகாணசபை உறுப்பினர்கள் தாக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ் உறுப்பினர்களும் பொலிசாரின் றைபிள் பிடிகளினால் தாக்கப்பட்டுள்ளனர். ஐக்கிய சோசலிச முன்னணியைச் சேர்ந்தசுனில்மென்டிஸ், நளின் விஜயரட்னா ஆகிய இருவருமே தாக்கப்பட்ட மாகாணசபை உறுப்பினர்களாவர்.

இவ்இருவரும் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## பல்லேகல தடுப்புமுகாம் புனர்வாழ்வு பிரிவின்கீழ்

பல்லேகல இராணுவத் தடுப்பு முகாமின் நிர்வாகம் கடந்த பதினைந்தாம் திகதி முதல் புனர்வாழ்வு பிரிவு ஆணையாளர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவிடம் வழங்கப் பட்டுள்ளது.

இம் முகாமில் ஜே.வி.பியை சேர்ந்தவர்கள் எனக் கூறப்படும் சுமார் அறுநூற்றைம்பதுபேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இம் முகாமிலிருந்து தப்பியோடும் முயற்சியில் ஈடுபட்ட மூவர் சுட்டுக்கொல்லப்பட்டதும், அறுவர் தப்பியோடியதும் தெரிந்ததே. மேலும் கைதிகள் தப்பியோடுவதற்காக ஒரு பெரிய சுரங்கப்பாதை அமைக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டதும் தெரிந்ததே.

## யாழ் மாவட்டத்தில் மூன்றரைலட்சம் மக்கள் இடம் பெயர்வு

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் எழுபதாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர் என்று யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தகவல் தருகையில் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் சரித்தா ரத்வத்தையுடன் தான் பேச்சுக்கள் நடத்தியிருப்பதாகவும், அவசியமான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் உறுதியளித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

---

## நினைவு கூருகின்றோம்..

## 1992 - 07 - 26

1983 ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறையில் சிங்களக் காடையர்களினால் தாக்கப்பட்டு இதே தினத்தில் மருத்துவமனையில் வீரச்சாவெய்திய -

★ **சிவானந்தராசா** (சித்திரவேல் சிவானந்தராசா- எல். பி. - 03, மூதூர், திருக்கோணமலை)

1986 ஆம் ஆண்டு தாமரைக் குளத்தில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**பவான்** [கிருஸ்ணபிள்ளை சுவேந்திரராஜா - தம்பிலுவில், அம்பாறை]

1987 ஆம் ஆண்டு சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**காந்தி** [கார்த்திக் - கண்டி]

அச்சுவேலியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1988 ஆம் ஆண்டு மட்டுவில் தெற்கில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய-

**கண்ணன்** [நமசிவாயம் நற்குணராசா - பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி]

1989 ஆம் ஆண்டு அம்பனையில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளரான -

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

டிச் சந்தி), பருத்தித்துறை.
(2895)

1992-07-24

[சி/4768]

பட்டனர். இரண்டு மீனவர்கள் பற்றித் தகவல் எதுவும் தெரியவில்லை.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
# ஏல விற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பாவனையில் இருந்த கீழ்வரும் பொருள்கள் எதிர்வரும் 92-07-29 ஆம் திகதி காலை 10-00 மணி முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திருநெல்வேலி வளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஏலத்தில் வெற்றி பெறுவோர் பொருள்களுக்கான முழுப்பணத்தையும் பல்கலைக் கழக காசாளரிடம் செலுத்தி அப்பொருள்கள் அனைத்தையும் 92-07-29 ஆம் திகதி மாலை 4-00 மணிக்கு முன்னதாக பல்கலைக்கழக வளவில் இருந்து அப்புறப் படுத்தல் வேண்டும்.

ஏலத்தில் விற்கப்படும் பொருள்களைப் பார்வையிட விரும்புவோர் 92-07-28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் அலுவலக நேரத்தில் பல்கலைக்கழக நிதியாளரோடு தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

## ஏலத்தில் விற்கப்பட இருக்கும் பொருள்கள்

1. கூட்டல் இயந்திரம் -02
2. கதிரைகள் - அலுவலகம் -03
   சாப்பாட்டு -07
   உருக்கு -01
3. கரட் உரஞ்சும் தட்டு -01
4. கேத்தில்- அலுமீனியம் சாதாரணம் -05
   மின்சாரம் -03
5. வாளி -05
6. தொற்று நீக்கி -01
7. செற்றி கதிரை - இருவர் இருப்பது -01
   ஒருவர் இருப்பது -02
8. பாத்திரங்கள் - பேசின் -9
   பட்டர் டிஸ் -02
   செம்பு எ/சி -01
   பீங்கான் -06
   ரம்ளர் -05
   இட்லி சட்டி -01
   தோசை கரண்டி -01
   இடியப்ப உரல் -01
   தண்ணீர்பாத்திரம் -02
   தேனீர் கோப்பை -09
   தேனீர் பீரிஸ் - 01
9. ஆட்டுக்கல் -01
10. மின்சார அடுப்பு -02
11. பழைய புதினப் பத்திரிகைகள்
12. கிளிப் அடிக்கும் இயந்திரம் -04
13. சிகரட் சாம்பல் தட்டு -01
14. துவிச்சக்கர வண்டி -01
15. ஓட்டை போடும் இயந்திரம்-12
16. அலுவலக கோவைத் தட்டு -01
17. தட்டச்சு இயந்திரம் -01
18. அருவாள் -01
19. ஆமைப்பூட்டு -03
20. சதுரங்க போட்டும் காய்களும் -01
21. பற்மின்ரன் றக்கற் -08
22. பற்மின்ரன் செற் -02
23. மேசைப்பந்து றக்கற் -05
24. கால் பந்து -01
25. ரியூப் லையிற் செற் -01
26. மணிக்கூடு (மேசை) -01
    (சுவர்) -02
27. கடம் -01
28. வயலின் பெட்டி 01
29. மண்வெட்டி -01
30. ஆய்வு கூட உபகரணம் -03
31. மேசை மின் விசிறி -02
32. மேசைக் கண்ணாடி 01
33. தண்ணீர் விடும் குழாய் -50 அடி
34. மேசை -02
35. போட்டோ பிரதி இயந்திரம் 02
36. கை கழுவும் பேசின் -01
37. மரப்பெட்டிகள் -
38. மரச்சிலாகையால் ஆன பெட்டிகள்
39. மரப்பெட்டி பலகைகள்
40. உத்தியோகத்தர்கான பாக்குகள்
41. அடிமட்டம் -03
42. கழிவு ஓயில்

ஏல விற்பனை நடத்தும் உத்தியோகத்தர்களின் முடிவே இறுதியானது

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்

(சி-4750)

விண்ணப்பங்கள்:-
விளம்பர இலக்கம் 161
மே/பா, ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம், என்ற முகவரிக்கு 02-08 1992 க்கு முன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(சி/4759)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரஜனனம்
**17-12-1972**



வீரச்சாவு
**23-07-1991**

## வீரவேங்கை குரு
(வாமதேவன் விக்கினேஸ்வரன் (பாபு)
(தங்கோடை, காரைநகர்)

தாயகத்தின் அடிமை விலங்கொடிக்க
வீறுகொண்டு வேங்கையானாய்
ஆனையிறவில் வீணர் முன்னே போரிட்டு
விடுதலைப் பயிர் வளர
செந்நீர் பாயவிட்டு
உடலை உரமாக்கி உயிரே!
நீ எங்கு சென்றாய்?
விண்ணுலக வீரருடன் வீர சுவர்க்கம்
அடைந்தீரோ?
விண்ணின்று சக வீரருடன் மீண்டும்
புலியாகப் பிறப்பெடுத்து வந்து
போர்க்களம் புகுந்திடடா!

இன்று (26-07-92) ஞாயிற்றுக்கிழமையன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஓராண்டுக் கிரியை வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு போராளிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மடத்தடி ஒழுங்கை,
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.

நித்தம் உன்னை எண்ணிச்
சித்தம் கலங்கும்
குடும்பத்தினர்.

(சி-4755)

கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1988 ஆம் ஆண்டு மட்டுவில் தெற்கில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய-

**கண்ணன்** [நமசிவாயம் நற்குணராசா - பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி]

1989 ஆம் ஆண்டு அம்பனையில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளரான -

**கனகரத்தினம் ரவீந்திரன்** [தெல்லிப்பழை]

இதே ஆண்டு இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட அல்வாய் சின்னத்தம்பி மகாவித்தியாலய ஆசிரியரான தமிழ்ப் பொதுமகன், நயினாதீவில் சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழ் இளைஞர்கள், பருத்தித்துறை ஓராம் கட்டைப்பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட 15 தமிழர்கள், சுதுமலையில் தேச விரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள், பருத்தித்துறையில் இந்தியப் படையினராற் சுட்டுக் கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த இருதயாக் கல்லூரி மாணவன்.

1990 ஆம் ஆண்டு மயிலிட்டியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**லெப். அன்ரனி / கமீத்** [சின்னத்துரை இராசசிங்கம் - நாவற்காடு, அச்சுவேலிதெற்கு]

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**குணம்** [வல்லிபுரம் ஜெயவீரசிங்கம் - புனிதபுரம், கற்கோவளம், காரைநகர்]

அம்பாறை - கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்துச் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன பொத்துவிலைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட இளைஞன் உட்பட செங்கலடியைச் சேர்ந்த 4 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். மணிவண்ணன்** [மேரிஜேசாப் பிரான்சிஸ் சேவியர் - அரிப்பு, முருங்கன், மன்னார்]

**வீரவன்** [சிவன் சந்திரன் - சீனன்குடா - கப்பல்துறை, திருக்கோணமலை]

திருக்கோணமலை பேராற்றுப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எம்மைப் பிரிந்த -

**பொனி** [சின்னத்தம்பி மோகனதாஸ் - திரியாய், திருக்கோணமலை]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ளமாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/4762]

சிந்தனைக்கு

அனுபவத்தின் பயன் அதிகம், பார்ப்பதில் அல்ல, அறிவோடு பார்ப்பதுதான்.

— ஸர் வில்லியம் அஸ்வர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 26-07-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## சிங்கள தலைவர்கள் வழியில் முஸ்லிம் தலைமை

''விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போராட விசேட முஸ்லிம் இராணுவப்படை ஒன்றை அரசு விரைவில் உருவாக்கித்தர வேண்டும்'' என அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்த 19 ஆம் திகதி கிரான் குளத்தில் 19 முஸ்லிம் பஸ்பயணிகள் சுட்டுக்கொல்லப்பட்டது தொடர்பாக இக் கொலைகளை அடுத்து கருத்து வெளியிட்ட திரு. அஷ்ரப் ''கொலைகளுக்குப் புலிகள் தான் பொறுப்பு என முடிவுகட்டிவிட முடியாது. வேறு சக்திகளும் பின்னணியில் இருக்கலாம்'' எனத் தெரிவித்திருந்தார். இந்நிலையில் திரு. அஷ்ரப் திடீரெனப் புலிகளுக்கு எதிராகப் போராட முஸ்லிம் இராணுவம் வேண்டும் எனப் பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தது அவரது குழப்பமான நிலையைக் காட்டுவதாகும்.

திரு. அஷ்ரப் கிரான் கொலைகள் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையானது சில முஸ்லிம் தலைவர்களினால் பலத்த கண்டனத்திற்கு உள்ளாகியது. அதாவது விடுதலைப் புலிகள் தான் கிரான் கொலைகளை செய்தார்களென்று நிரூபிப்பதற்கு எந்தவிதமான சான்றும் இல்லாதபோதும், சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளும் வழமையானபிரசாரத்தின் அடிப்படையில் புலிகள் தான் கொன்றார்கள் என்பதை முழுமையாக ஏற்காது, கேள்வி எழுப்பியமையே அஷ்ரப் மீதான கண்டனத்திற்கு முக்கிய காரணமாகும்.

திரு. அஷ்ரப் புலிகளின் ஆதரவாளனும்அல்ல. புலிகளுக்காகப் பரிந்து பேசுபவரும் அல்ல. தமிழ் -முஸ்லிம் மக்களுக்கிடையில் இன்றுள்ள மோசமான உறவு வளர காரணமாக இருந்தவர்களில் அஷ்ரப்பின் பங்கு கணிசமானதாகும். அத்தோடு தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு இடையில் இனவாத மோதலைக் கிளறிவிட்டு தேர்தல் ஆதாயம் தேடியவர் அஷ்ரப். அதேபோன்று கிழக்கில் முஸ்லிம் ஊர்காவல்ப்படை அமைக்கவேண்டும் எனவும்கோரியவரும், அதன்மூலம் நூற்றுக்கணக்கில் தமிழர்

# கூட்டுப்படைத் தலைமையக அதிகார மாற்றம்;

# பின்னணியில் நிகழ்ந்தவை

விடுதலைப் புலிகளைத் தாக்குவதை விட அல்லது அவர்கள் மீது கவனத்தை திருப்புவதற்கு முன்பாக கூட்டுப் படைத் தலைமையகத்தினால் அதாவது அதிகார வர்க்கத்தினரால் போடப்படும் முட்டுக் கட்டைகளை உடைத்தெறிய வேண்டிய நிலையிலேயே முப்படைகளின் தளபதிகளும் பொலிஸ்மா அதிபரும் உள்ளனர்.

முன்னதாக கடந்த மார்ச் மாதத்தில் கூட்டுப்படைத் தலைமையகத்திடம் இருந்த பொறுப்புக்களையெல்லாம் முப்படைகளின் தளபதிகளுக்கும் சிறிலங்கா ஜனாதிபதி பிரித்து வழங்கியிருந்தார்.

பின்னர் இப்போது மீண்டும் அந்த அதிகாரங்களை பெறுவதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் முயற்சிக்கின்றது. இதன் முதல் நடவடிக்கையாக கூட்டுப்படைத்தளபதி ஹமில்டன் வணசிங்கா முப்படைகளின் தளபதிகளுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். இதனைத் தொடர்ந்து பாதுகாப்பமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்காவும் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து முப்படைத் தளபதிகளும் மீண்டும் பிரேமதாசாவிடம் 'தமது முயற்சிகளுக்கு இடையூறு விளைவிக்கப்படுவதாக' முறையிட்டுள்ளனர். அத்துடன் படையினர் மத்தியில் முணுமுணுப்பையும், கிசுகிசுக்களையும் ஏற்படுத்தும் விடயமாக இது மாறியுள்ளது.

இனப்பிரச்சினைக்கான கருத்தொருமைப்பாடான தீர்வைக்காணும் முயற்சி பலத்த பின்னடைவை சந்தித்து வரும் இவ்வேளையில் விடுதலைப் புலிகளை இராணுவரீதியில் தோல்வி அடையச்செய்ய வேண்டும் என்று பாதுகாப்புப் படையினர் மீது நிர்ப்பந்தங்கள் அதிகரித்து வருகின்றன.

அரசாங்கத்திடம் இருந்து இதற்கான ஆணையைப் பெற்றுக்கொண்ட முப்படையினரும் யாழ்ப்பாணத்தை மீளக் கைப்பற்றுவதற்கான முக்கிய திட்டங்களை வகுத்து வருகின்றனர் என்பதும், அதன்மூலம் விடுதலைப்புலிகளை பலவீனப் படுத்தலாம் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

இதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்ட பின்னர், மூன்று மாதங்களுக்குள் இதன் விளைவுகளைக்காட்டவேண்டுமென அரசாங்கம் முப்படைத் தளபதிகளுக்கும் பணிப்புரை விடுத்துள்ளது.

அரசாங்கத்திடமிருந்து கிடைத்துள்ள எச்சரிக்கையை

கொண்ட முப்படையினரும் யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவதற்கான முக்கிய திட்டங்களை வகுத்து வருகின்றனர். இவ்வாறான திட்டங்களை அமுல் படுத்துவதன் மூலம் விடுதலைப்புலிகளைபலவீனப் படுத்தலாம் என்றும் எதிர் பார்க்கின்றனர்.

இவ்வாறு விடுதலைப்புலிகளைப் பலவீனமாக்கி, அரசாங்கத்துடன் பேசி இணக்கமான தீர்வொன்றுக்கு வரச் செய்தல் என்பதே கடும் தாக்குதல் நடத்துவதன் நோக்கம் எனச் சொல்லப்படுகிறது. இதைத்தவிர வேறு வழியில்லை என்பதை விடுதலைப் புலிகளுக்கு உணர்த்துவதற்காக தாக்குதலைத் தீவிரப் படுத்த வேண்டியுள்ளது.

ஆனால் விடுதலைப்புலிகளுடனான பேச்சில் ஒரு முறை அனுபவப்பட்ட பின்னர் அரசாங்கம் புலிகளுடன் பேசுவதை தாமதப்படுத்துவதும் தயங்குவதும் புலனாகிறது. யாழ்ப்பாணத்தினுள் பாதுகாப்புப் படையினர் பிரவேசித்ததும், விடுதலைப்புலிகள் பலவீனமடைவார்கள்என்றும் அதன் விளைவாக பேரம் பேசுதல் இன்றி விரைவான ஒரு தீர்வைக்காண அவர்கள் இணங்குவார்கள் என்றும் அரசியல் ஆய்வாளர்கள் எதிர் பார்க்கின்றனர்.

இதற்கேற்ப திட்டங்கள் தீட்டி மூன்று மாதத்திற்குள் விளைவுகளைக் காட்ட அரசாங்கம் முப்படைகளுக்கும் ஆணை பிறப்பித்திருந்தது.

ராணுவ ரீதியான திட்டங்களை தவறின்றி வகுத்துக் கொள்வதில் அவர்கள் முக்கிய கவனம் எடுத்துக் கொண்ட போதும் எதிரியுடனான யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் முப்படைத் தளபதிகளும் பொலிஸ்மா அதிபரும் அதிகார வர்க்கத்தின் கண்ணி வெடிகளுக்கும் இலக்காகி வருகின்றனர்.

### இடைஞ்சல்கள்

முன்னர் திட்டமிடுதலின் ஆரம்பத்தில் முப்படைகளின் தளபதிகளான லெப். ஜெனரல் சிசில் வைத்திய ரட்ணா, வைஸ்அட்மிரல் கிளான்ஸி பெர்னான்டோ. ஏயார்மார்ஷல் ரெரன்ஸ் குணவர்த்தனா பொலிஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா ஆகியோர் கூட்டுப் படைத்தளபதியான ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா மற்றும் பாதுகாப்பு அமைச்சின்

ஆகியோரின் மேற்பார்வைக்கு உட்பட்டே செயற்பட வேண்டியிருந்தது. ஜெனரல் சிறில் ரணதுங்கா முன்னர் கூட்டுப் படைத் தளபதியாக இருந்தவர் என்பதுடன் வடமராட்சி நடவடிக்கைகளை தொடர்ந்து பிரபல்யம் ஆனவர் என்பதும் தெரிந்ததே.

முப்படைகளினதும் நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கும், இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுவதற்கும் இந்த ஏற்பாடு இடைஞ்சலாக இருப்பதாக முப்படைத் தளபதிகளும் கருத்து வெளியிட்டு வந்தனர்.

இந்த நிலையில் இம்முறை திருப்தி கரமான விளைவுகளைப் பெற வேண்டியதன் அவசியத்தின் காரணமாக அரசாங்கம் முப்படைத் தளபதி

> கூட்டுப் படைத் தலைமையகத்தில் கடந்த மார்ச் மாதத்தில் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவினால் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களின் பின்னணியில் இடம் பெற்ற சம்பவங்கள் பற்றி ஜூலை 19ம் திகதிய சண்டே ரைம்ஸ் வார இதழில் வெளியாகிய கட்டுரையின் மொழியாக்கம் இது.

களும் சுதந்திரமான வகையில் செயற்பட அனுமதி அளித்தது இராணுவ நடவடிக்கைகளில் தளபதிகள் ஈட்டும் வெற்றிகள் அரசாங்கத்தின் வெற்றிகளாகவே கருதப்படும் என்பதும் தெரிந்ததே.

எனினும் பல்வேறு தரப்பினரும் இது குறித்து எழுப்பும் சந்தேகங்களுக்கும் எதிர்க் கட்சியினர் தூண்டும் மக்கள் கிளர்ச்சிக்கும், முகம் கொடுக்கும் அதேவேளை வடக்கில் இராணுவம் வெற்றி பெறுவது வெறும் கனவு என்றும் வழுக்கு மரத்தில் ஏறும் முயற்சியாகவே இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இந்த வகையில் இத்தகைய அம்சங்களை சீர்தூக்கிப் பார்

ந்த மார்ச் மாதத்தில் கூட்டுப் படைத் தலைமையிடம் இருந்த பொறுப்புக்கள் அனைத்தையும் முப்படைகளின் தளபதிகளுக்கும் பிரித்து வழங்கியதோடு போரைவெற்றிகரமாக முடிவுக்கு கொண்டு வரவும் ஆணை பிறப்பித்தார். ஜனாதிபதியை பொறுத்த வரை விளைவுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர் என்று அவரது கட்சியினர் சொல்கின்றனர். பழைய சாதனைகளில் அவருக்கும் பெரும் ஆர்வம் இல்லை.

இவ்வாறு முடிவுகளை எடுத்ததும் அவர் உடனேயே அவற்றை செயற்படுத்தினார். ஆனால் வெகு விரைவிலேயே கஷ்டங்களையும் அவர் எதிர் நோக்க வேண்டியதாயிற்று.

பாதுகாப்பு செயலாளரான சிறில் ரணதுங்கா கூட்டுப் படைத் தலைமையகம் செயலிழக்க வைக்கப்பட்ட பின்பு தாம் தொடர்ந்தும் பதவி வகிப்பது கடினமானதாக இருக்கும் என்று மார்ச் மாதத்திலேயே கருத்து வெளியிட்டார்.

எனினும் ஜனாதிபதி இம்முறை கூட்டுப்படைத் தலைமையின் கீழான வெளிப்பாடுகள் வெற்றிகரமாக அமையவில்லை என்று ஏற்றுக் கொண்ட அதேவேளை கடினமான நேரங்களில் உறுதுணையாகவும், விசுவாசத்தோடும் செயற்பட்ட பாதுகாப்புச் செயலாளரின் உணர்வுகளைப் புண்படுத்தவும் விரும்பவில்லை.

இதனால், முன்னாள் இராணுவ தளபதியை தாமே நேரில் அழைத்து ஜூன் மாதத்திற்கு இடையில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியும் என்று நம்பிக்கை ஊட்டியதுடன், கிழக்கு மாகாணத்தில் தேர்தல் ஒன்றை நடத்த வகை செய்யும் படியும் கேட்டுக் கொண்டார். இதனால் யுத்தத்தை வெல்வது என்பது முதலிடம் பெற தனிமனித உணர்வுகள் நாட்டின் நலன் கருதி பின்தள்ளப் பட்டன. இந்த இலக்குடன் ஜனாதிபதி தனது கடின நேரங்களில் கை கொடுக்கும் சட்டத்தரணி கே. என். சொக்ஸியை அழைத்தார்.

ஜெனரல் சிறில் ரணதுங்க, ஜெனரல் ஹமில்டன் வணசிங்க ஆகியோரின் உணர்வுகளுக்கு மதிப்பு இருக்கக்கூடிய அதேவேளையில், முப்படைத்

சென்றடையக் கூடிய வகையில், வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை பிரகடனம் செய்வதற்கு தேவையான நகலொன்றைத் தயாரிக்கும் படி கே. என். சொக்ஸிக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல் விடுத்தார்.

சட்டத்துறையில் கழுகான கே.என். சொக்ஸி முப்படைத் தளபதிகளுக்கும் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் வகையில், கூட்டுப்படைத்தலைமையகத்திற்கு ஆலோசனை வழங்கும் கடமையை மட்டும் ஒதுக்கி ஒரு நகல் பிரகடனத்தை தயார் செய்தார்.

இந்த நகலைத் தயாரித்த பின்னர் பிரதமர் டி.பி. விஜயதுங்காவுடனும், கைத்தொழில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்காவுடனும் மார்ச் 21ஆம் திகதியன்று கலந்தாலோசனை நடத்திவிட்டு மறுநாள் மூவருமாக பிரேமதாசாவைச் சந்தித்தனர். அவர் பச்சை விளக்கு காட்டினார்.

மறுநாளே, அதாவது மார்ச் 23ஆம் திகதியன்றே முப்படைகளினதும் தளபதிகளை நேரில் அழைத்த பிரேமதாசா அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்பட்டதாக தெரிவித்த அதே வேளை விளைவுகளை விரைவில் காட்டும் படியும் கேட்டுக் கொண்டார். மார்ச் 26ஆம் திகதியன்று வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியதுடன் மாற்றங்கள் நிறைவாகின. ஆனால் இவை நடந்தபோது சிறில் ரணதுங்க நாட்டில் இருக்கவில்லை.

1991ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் திகதியன்று கூட்டுப் படைத் தலைமையகம் மீளச் செயற்பட ஆரம்பித்த போது அதற்கு 1984ஆம் ஆண்டில் முதல் தடவையாக நிறுவப்பட்ட வேளையில் இருந்த அதிகாரங்கள் யாவும் வழங்கப்பட்டு இருந்தது.

எப்படியாயினும், இத்தகைய மாற்றம் செய்யப்பட்டபோதே இது தவறான ஆலோசனையின் கீழ் செய்யப்படுவதாக இராணுவ ஆய்வாளர்கள் கூறியது நான்கு மாதங்கள் கடந்த பின்னர் மார்ச் மாதத்தில் திருத்திக் கொள்ளப்பட்டுள்ளது. புதிதாக அமைக்கப்பட்ட கூட்டுப்படைத் தலைமையக அமைப்பானது இராணுவம் பலத்த நெருக்கடிகளைச் சந்திக்கும் இன்றைய நிலைக்கு பொருத்தமற்றதாகும்.

யவரும், அதன்மூலம் நூற்றுக்கணக்கில் தமிழர்கள் கொல்லப்படுவதற்கும் தமிழ் பெண்கள் மானபங்கப்படுத்தப்படுவதற்கும் தமிழர்கள் உடமைகள் சூறையாடப்படுவதற்கும் காரணமாக இருந்தவர்.

இந்நிலையில் கிரான் கொலைகள் குறித்து திரு. அஷ்ரப் தெரிவித்தமை அவருக்கு எழுந்த நிதர்சனமான ஒரு சந்தேகமே ஒழிய புலிகள் மீதான ஓர் பற்றோ, பாசமோ அல்லது புலிகளை பாதுகாக்க வேணடும் என்ற உணர்வோ அல்ல. ஆனால் இதனைச் சாட்டாக வைத்து சில முஸ்லிம் தலைவர்கள் துள்ளி எழுந்தனர். திரு. அஷ்ரப் மீது தமக்கு இருந்த பகைமையை இத்தருணத்தில் தீர்த்துக் கொள்ளவும் அதன்மூலம் தாம் 'முஸ்லிம்களின் தலைவர்கள்' எனவும் காட்டிக் கொள்ள முற்பட்டனர்.

இதனால் திரு. அஷ்ரப் ஏனைய முஸ்லிம் தலைவர்களை விடவும் முஸ்லிம்களின் பாதுகாவலன் எனவும், தமிழருக்கு விரோதி என்பதையும் காட்டிக் கொள்ளும் அவசியம் ஏற்பட்டது இந்நிலையில் தான், தற்பொழுது முஸ்லிம்களுக்கு தனி இராணுவம் ஒன்று தேவை என்றும், விடுதலைப்புலிகளுக்கு எதிராக போராடப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை கிழக்கில் இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கும் தமிழர் மீதான படுகொலைகளுக்கும், அத்துமீறல்களுக்கும் முஸ்லிம் ஊர்காவற் படையினரே முக்கிய காரணம் எனவும், அவர்களிடம் இருந்து ஆயுதங்கள் களையப்பட வேண்டும் எனவும், அரசிற்கு உள்நாட்டில் இருந்தும், வெளிநாட்டில் இருந்தும் நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதேவேளை, முஸ்லிம் இராணுவம் ஒன்று அமைக்கப்படுமாயின் அதன் விளைவு கிழக்கில் மேலும் இரத்த ஆறு ஓடவே வழி வகுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் திரு. அஷ்ரப்பின் இக்கோரிக்கையானது, முஸ்லிம்களின் தலைமைகளும், சிங்களப் பேரினவாத கட்சிகளின் கொள்கைகளை முழுமையாக உள்வாங்கியுள்ளதைத் தெளிவாகக் காட்டுகின்றது. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குப் போட்டி போட்டுக் கொண்டு தமிழர் மீது ஒடுக்குமுறையைச் சிங்களக் கட்சிகள் திணித்தது போன்று முஸ்லிம் தலைமைகளும் தமிழருக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கை மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற முனைகின்றன.

அரசாங்கத் திடமிருந்து கிடைத்துள்ள எச்சரிக்கையையும், ஆணையையும் பெற்றுக்

ஹமில்டன் வணசிங்கா மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்கா

இந்த வகையில் இத்தகைய அம்சங்களை சீர்தூக்கிப் பார்த்த பின்னர் ஜனாதிபதி கட

சிங்க ஆகியோரின் உணர்வுகளுக்கு மதிப்பு இருக்கக்கூடிய அதேவேளையில், முப்படைத் தளபதகளிடம் அதிகாரம்

தாகும்.

(தொடரும்)

## அமெரி. வானொலி நிலையம் கட்டட வேலை மார்ச்சில்

(கொழும்பு)

சிலாபம், நாத்தாண்டியா தேர்தல் தொகுதிகளில் அமைக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்ட அமெரிக்க வானொலி நிலையத்தின் கட்டட வேலைகள் மீண்டும் அடுத்த மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்படும் என்று அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் திங்களன்று கொழும்பில் கூறினர்.

அறுபது மில்லியன் டாலர் செலவில் திட்டமிடப்பட்ட இந்த உத்தேச நிலையம் அமைக்கும் வேலைகள் அசம்பாவிதங்கள் ஏற்பட்டதன் காரணமாக முன்னர் இடைநிறுத்தப்பட்டது தெரிந்ததே.

தற்போது இந் நிலையத்திற்கென நாநூற்றுப் பதின் மூன்று ஏக்கர் நிலம் அரசினால் குத்தகைக்கு விடப்பட்டிருப்பதாகவும், இனிமேலும் கட்டட வேலைகள் தாமதமாகாது எனவும், 1995 ஜனவரியில் இந்நிலையம்செயற்பட ஆரம்பிக்கும் எனவும் அமெரிக்க செய்திச் சேவையைச் சேர்ந்த மௌறர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் கடந்த நாற்பது ஆண்டுகளாக இலங்கையின் வானொலித் தொடர்பை அமெரிக்கா வெற்றிகரமாகப் பயன்படுத்தி வந்திருப்பதாகவும், புதிய வசதிகள் மூலம் தெற்காசியப் பிராந்தியத்தில் அமெரிக்க ஒலிபரப்பு வலுமிக்கதாகும் எனவும் குறிப்பிட்டார்.

## இனவாதத்தை கிளப்பும் அரசியல் கலாசாரம்

(கொழும்பு)

பிரச்சினைகளுக்கெல்லாம் இனவாதத்தைக் கிளப்பும் அரசியல் கலாசாரம் மேலோங்கி வருவதாக அமைச்சர் பீ. தேவராஜ் கவலை வெளியிட்டார். பாராளுமன்றத்தில் அவசரகால நிலை நீடிப்பு தொடர்பான விவாதத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில் அரசியல் பிரச்சினைக்கு இனவாதம் கிளப்பப்படும். அரசியல் கலாசாரம் வளர்த்து எடுக்கப்பட்டிருப்பதாக கவலையோடு குறிப்பிட்டார்.

## சிறி விக்கிரமராஜசிங்கனின் வழித்தோன்றல் மரணம்

கண்டியின் இறுதி மன்னன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனின் வழித்தோன்றலான ; சிறிசுக்த ராஜசிங்கா கடந்த 19-7-92 அன்று சென்னையில் காலமானார்.

சென்னைக்கு அண்மையில் உள்ள ஆவடி என்னும் இடத்தில் இவரது சடலம் பெட்டி ஒன்றினுள் காணப்பட்டது. சடலம் பின்னர் அடையாளம் காணப்பட்டது.

## ஈராக்கிற்கு எதிராக மீண்டும் அமெரிக்கா நடவடிக்கை எடுக்கும்

**- ஜேம்ஸ் பேக்கர்**

(ஜெட்டா)

ஈராக்கிற்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் தடை உத்தரவுகளைச் செயற்படுத்துவதற்கு தேவைப்பட்ட அனைத்தையும் அமெரிக்கா செய்யும் அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கர் நேற்று முன்தினம் சவூதி அரேபியாவில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

மேலும் போர் நிறுத்த ஏற்பாடுகளுக்கு ஈராக் பணிந்து வராவிட்டால் நேசநாடுகள் இராணுவ நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் இறுதி எச்சரிக்கை ஒன்றை விடுக்கவுள்ளன. இதில் வேறு சிலநாடுகளும் சேர்ந்து கொள்ளலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இதனிடையே ஐ. நா. ஆய்வுக்குழு சில அரசுக் கட்டடங்களினுள் நுழைய ஈராக் அனுமதி மறுப்பதைக் குறித்து உயர்தேசிய பாதுகாப்பு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தவென அமெரிக்க அதிபர் புஷ் காம்ப்டேவிட்டில் ஒரு மாநாட்டை நடத்தவுள்ளார்.

## தமிழகத்தில் மது விலக்கு; இ. காங்கிரஸ் கோரிக்கை

(சென்னை)

தமிழ் நாட்டில் பூரண மது விலக்கை அமுல்படுத்தவேண்டும் என்று இந்திரா காங்கிரசைச் சேர்ந்த சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ் ஆர்.பாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார்.

மதுபானக் கடைகளை நடத்த முன்னைய அரசு அனுமதி வழங்கியது ஏழைகளைப் பெரிதும் பாதிக்கும் என்று அண்ணா தி. மு. க. தமது தேர்தல் விஞ்ஞானபத்தில் கூறியதற்கிணங்க ஜெயலலிதா அரசு மதுபானக்கடைகளை திறக்க அனுமதி வழங்கக்கூடாது என்றும் அவர் கூறியுள்ளார்.

## இந்தியாவின் முன்னேற்றத்திற்கு ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்

### ஒய்வுபெறும் குடியரசுத்தலைவர் வேண்டுகோள்

(டில்லி)

நாட்டின் முன்னேற்றத்திற்கு ஜாதி, மதம், இனம், மொழி, வேறுபாடுகளைக் கடந்து அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்று இந்தியக் குடியரசுத் தலைவர் பதவியிலிருந்து ஓய்வு பெறு முன்பாக வானொலி மூலம் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் ஆர். வெங்கட்ராமன் வேண்டுகோள் விடுத்தார். அவர் அச்செய்தியில் மேலும் கூறுகையில்.

நாடு சுதந்திரம் அடைந்தது முதல் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் கடைப்பிடித்தமையால்தான் பிரமிக்கத்தக்க முன்னேற்றத்தைக் கண்டிருப்பதாகவும், மற்றவர்களின் நம்பிகைகைகளையும், கருத்துக்களையும், வாழ்க்கை முறையையும் சகிப்புத் தன்மையோடு ஏற்றுக்கொண்டு சமூகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கருணையோடு உதவுவதுதான் இந்தியாவின் உண்மையான பண்பு என்றும் தெரிவித்தார்.

அத்துடன் இந்தியாவில் வறுமை நிலவுவதற்கு மக்கள் தொகைப் பெருக்கம் தான் காரணம் என்றும் மக்கள் தொகை பெருகுவதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

ஈழநாதம்

# அடுத்த சந்ததியினர் பற்றி
## அரசியல்வாதிகளுக்கு கவலையில்லை
### - அமைச்சர் ரணசிங்கா

(கொழும்பு)

பிரேமதாசா பிரச்சினையை தீர்க்க தன்னால் இயன்ற மட்டும் முயல்கிறார். ஆனால் அவராலும் தீர்க்க முடியவில்லை ஏனென்றால் பாவம் அவரும் அரசியல் வாதிதான் அடுத்த சந்ததியைப் பற்றி அரசியல் வாதிகளுக்கு கவலை இல்லை அதிகாரத்தைக் கைப்பற்றவே அவர்கள் ஆசைப்படுகின்றனர்.

இவ்வாறு சிறிலங்கா தகவல் துறை இராஜாங்க அமைச்சர் ஏ.ஜே.ரணசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சகோதரர்களை சகோதரர்களே கொல்லும் இந்த யுத்தத்தை எவ்வளவு காலத்துக்குத்தான் தொடர விடுவது? பெண்களின் உடலை நான்காக வெட்டி கிணற்றிலே போடுகிறார்கள் எந்தளவு மோசமான நிலைக்கு எமது நாடு போய் விட்டது.

வடக்கு, கிழக்கிலே மிகவும் மோசமான முறையில் கொலைகள் நடக்கின்றன எமக்காக இந்தபோரை நடத்துபவர்கள் யார்? கிராமப்புற இளைஞர்கள்தான் போரில் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள் அரசியல் வாதிகளின் பிள்ளைகள் வெளிநாடுகளிலும் பல்கலைக் கழகங்களிலும், கிளப்புகளிலும், நீச்சல் தடாகங்களிலும் இருக்கிறார்கள் என்பதைநாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இன்று நாம் குழந்தைகளுடன் சண்டையிடவில்லை தங்களை அர்ப்பணித்துக் கொண்ட ஒரு இயக்கத்தினருடன் போரை நடத்திக்கொண்டிருக்கிறோம்.

இனவாதச் சிந்தனையைக் கொண்டிருப்பது சமுதாயத்தில் உண்மையிலேயே ஒரு குற்றச் செயலாகும். எமது நாட்டு மக்கள் தவறுதலாக வழி நடத்தப் பட்டு விட்டார்கள். எமது நாடு இன்று மோசமான வன்முறையில் சிக்கிக் கிடக்கிறது. இந்நிலையைத் தொடர விடுவோமானால் எமக்காக எவருமே எதிர்காலத்தில் அஞ்சலி கூட செலுத்த மாட்டார்கள் என்று தெரிவித்தார்.

# மகப்பேற்று லீவு காலம் அதிகரிக்கப்பட்டுள்ளது

[யாழ்ப்பாணம்]

மகப்பேற்று லீவு தாபன விதிக்கோவை அத்தியாயம் பன்னிரெண்டு பிரிவு 18/6 இல் திருத்தம் செய்யப்பட்டு மகப்பேற்று லீவு காலம் நீடிக்கப் பட்டுள்ளது.

மகப்பேற்று லீவைக் கணக்கிடும்போது அந்த லீவின் காலப் பகுதிக்குள்வருகின்ற அரசாங்க விடுமுறை நாள்களும் சனி ஞாயிற்றுக்கிழமைகளும் கணக்கில் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. அதற்கமைய லீவைக் கணக்கிடுதலில் முதல் இரண்டு பிரசவம் ஒவ்வொன்றுக்கும் வழங்கப்படும் 12 வாரங்கள் 84 வேலையாற்றும் நாள்களாகவும், அடுத்து வரும் ஒவ்வொரு பிரசவத்துக்கு வழங்கப்படும் ஆறு கிழமைகள் 2 வேலையாற்றும் நாள்களாகவும் கருதப்படலாம் என்றும் மேலும் அத்திருத்தம் தெரிவிக்கின்றது.

# மாணவர் அமைப்பினர் கல்வி நிலையம் திறப்பு

(வவுனியா)

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் வவுனியா பிரிவினரால் இரணை இலுப்பைக்குளம் பகுதியில் கல்வி நிலையம் ஒன்று கடந்த 17 ஆம் திகதி வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

வீரவேங்கை திசாவின் பெயரில் திறந்து வைக்கப் பட்ட இக் கல்வி நிலையத்தில் இலவச வகுப்புகள் நடைபெறுகின்றன.

இந் நிகழ்வில் வன்னிப் பிராந்திய உதவி அரசியல் பொறுப்பாளர் திரு.ஞானம், வவுனியா மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு.புவிதரன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

8 ஆம் வகுப்பிற்கு மேல் சுமார் 150 மாணவர்கள் இக் கல்வி நிலையத்தில் கல்வி கற்கிறார்கள். (தி)

ஆங்கில - சிங்கள மொழிபெயர்ப்பாளர்கள்

# ஜனதாதள தலைவர் விடுதலை

(டில்லி)

அயோத்தியாவில் கட்டுமாணப் பணிகள் நடைபெறுவதை ஆட்சேபித்து லக்னோவில் நேற்று முன்தினம் நிகழ்ந்த ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்ட ஜனதா தளத் தலைவர் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

வி.பி.சிங், எஸ்.ஆர். பொம்மை, ஜோர்ஜ்பெர்னாண்டஸ், முப்தி மகம்மத் சையத் ஆகியோரும் நேற்று முன்தினம் கைதானவர்களில் இடம்பெற்றனர் இவர்கள் அனைவரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

## கலந்துரையாடல்

இடம்பெயர்ந்த தீவகமக்கள் நலன்காக்கும் கழகத்தின் நிர்வாகசபைக் கூட்டமும் முக்கிய மான கலந்துரையாடல் ஒன்றும் இன்று காலை 10-00 மணியளவில் மேற்படி கழகத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற உள்ளதால் அனைத்து நிர்வாகசபை உறுப்பினர்கள், முகாம் பொறுப்பாளர்கள் (தலைவர்கள்) மற்றும் பொதுஸ்தாபன பிரதிநிதிகள், சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் தவறாது கலந்து கொள்ளுமாறு கழகம் கேட்டுள்ளது.

# இரண்டாவது ஆண்டு நிறைவு விழா

(குருநகர்)

யாழ்.திருமறைக் கலாமன்ற கவின்கலைகள் பயிலக 2 ஆவது ஆண்டு நிறைவுவிழா இன்றும் நாளையும் நடைபெறுவதை ஒட்டி மாணவர்களின் 'கலைக்கதம்பம்' நடைபெறும்.

யாழ். பிரதானவீதி மன்றக் கலையரங்கில் இன்று நடைபெறும் வைபவத்திற்கு யாழ். கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. வேலாயுதமும். நாளை நிகழ்ச்சிகளுக்கு யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடாதிபதி பேராசிரியர் கா. சிவத்தம்பியும் தலைமை தாங்குவர்.

கலைக்கதம்பத்தில் மாணவர்களின் வீணை, வயலின், மிருதங்க நடன நிகழ்ச்சிகளும் திரு. சி. நாகராசா, திருமதி அ. தனபாலசிங்கம் ஆகியோரது வாய்ப்பாட்டு நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (21)

## கலை பண்பாட்டு

கள், விளக்குகள், விருதுகள், தாம்பாளங்கள், அரும்காட்சிப் பொருட்கள், ஏட்டுச்சுவடிகள், சான்றிதழ்கள், தேடக்கிடைத் தற்கரிய பிரசுரங்கள், புத்த

# இரண்டு நாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வலி.தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசத்தில் அங்கம் வகிக்கும் அங்கத்தவர்களுக்கான இரண்டு நாள் கருத்தரங்கொன்றை மகளிர் அபிவிருத்தி நிலையம் இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் இன்றும் நாளையும் நடாத்தவுள்ளது.

இக்கருத்தரங்கு கிராமிய அபிவிருத்திக்கான பல உபாயங்களை எடுத்துக்காட்டும் நோக்குடன் பல செயற்திட்டங்களுக்கு வழிகாட்டியாக அமையவுள்ளது எனவும் இக் கருத்தரங்கை முன்னோடியாக கொண்டு சில செயற்திட்டங்களை உருவாக்குவதற்கு மகளிர் அபிவிருத்திநிலையம் முன்வந்துள்ளது.

இக்கருத்தரங்கில் கிராம அபிவிருத்திதொடர்பான விடயங்களில் அனுபவமவாய்ந்தோர் பலர் தமது கருத்துக்களை வழங்கவுள்ளனர்.

# வடிகால்கள் துர்நாற்றம்

(மண்டைதீவு)

# போராட்ட பங்களிப்பில் தென்தமிழீழம் முன்மாதிரி
### - இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

மக்கள் வேறு புலிகள் வேறு என்ற நினைவின்றி மக்களும் புலிகளும் ஒன்றே என்ற ரீதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு முழுமையான பங்களிப்பை வழங்குவதில் தென் தமிழீழ மக்கள் முன்மாதிரியாகத் திகழ்கிறார்கள். இவ்வாறு நேற்று நாவாந்துறை நீகன் நகரில் மாவீரர் நினைவு மண்டபத் திறப்புவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

தமிழீழவிடுதலைப்போராட்டத்தில் எல்லாத்தரத்திலும் நின்றும் பார்க்கின்றபோது தென் தமிழீழ மக்களின் பங்களிப்பும் அர்ப்பணிப்பும் மிக அதிகமாகவே உள்ளது. தினந்தோறும் தென் தமிழீழத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைப்பு தேடுதல்வேட்டைகளை மேற்கொண்டு தமிழீழ மக்களைக் கைது செய்தும், படுகொலை செய்தும் வருகின்றனர். இந்த நிலையில் தமிழீழத்தில் புலிகளின் போராட்ட வேகம் வளர்ச்சியடைந்து கொண்டேபோகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கப்டன் ஜிம்கெலி சனசமூக நிலையத் தலைவரின் தலைமையில் இடம்பெற்ற இவ் விழாவில் யாழ். மாவட்டத் தளபதி செல்வராசா மாவீரர் நினைவு மண்டபத்தைத் திறந்துவைத்தார். யாழ்.மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி தமிழீழத்தேசியக்கொடியை ஏற்றி வைத்தார். மங்களவிளக்கினை மட்டு அம்பாறை தொடர்பக பொறுப்பாளர் திரு அருணகிரியும், மாவீரர்கள் தீபத்தை கடற்புலிகளின் தளபதி திரு. கங்கையமரனும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து அங்கு நடைபெற்ற கூட்டத்தில் கடற்புலிகளின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. மறவன், யாழ். மாநகரசபை ஆணையாளா திரு. பாலசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்.

# விண்ணப்பம் எதிர்பார்ப்பு

பட்டதாரிகளுக்கான வெளிநாட்டுப் புலமைப் பரிசில்கள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் கல்வி உயர்கல்வி அமைச்சினால்கோரப்பட்டுள்ளது பிரிட்டன், கனடா, ஹொங்கொங், அவுஸ்திரேலியா, றினிடாட், றொபாக்கோ, நியூசிலாந்து, நைஜீரியா ஆகிய நாடுகளில் கல்வி கற்பதற்கான பொது நல அமைப்பு நாடுகளின் பட்டப்பின் படிப்புக்கான புலமைப் பரிசில்களை அளிக்கும் பொருட்டு தகுதியுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. ஜப்பானிய அரசு வழங்கும் பட்டப்பின் ஆராய்ச்சிக்கான புலமைப் பரிசிலுக்கான விண்

# கவிஞர் காசி ஆனந்தனின் 'தமிழன் கனவு' நூல் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் ''தமிழன் கனவு'' என்ற கவிதை நூலின் அறிமுக விழா நாளை திங்கட் கிழமை பிற்பகல் 2. 30 மணியவில் யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

சாளரம் வெளியீடான இந்த நூலின் அறிமுக விழாவை விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் ஏற்பாடு செய்திருக்கின்றது இவ்விழாவுக்கு திரு. யோகரத்தினம் யோகி அவர்கள் தலைமை தாங்குவார். திரு. இளங்குமரன் அவர்கள் நூலின் அறிமுகவுரையை நிகழ்த்துவார். திரு. குழந்தைவேலு, பண்டிதர் வீ. பரந்தாமன், திரு. புதுவை இரத்தினதுரை ஆகியோர் இந்நூலின் ஆய்வுரைகளை நிகழ்த்த உள்ளனர்.

# அம்பு எறிந்து தீபம் ஏற்றல்; ஒலிம்பிக்கில் புதுமை

(மாட்றிட்)

ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரத்தில் இலங்கை-இந்திய நேரப்படி நேற்றிரவு 11-30மணிக்குஒலிம்பிக் விளையாட்டு விழா ஆரம்பமாகியது விழாஅடுத்தமாதம் 9 ஆம்திகதி வரை நடைபெறவுள்ளது.

ஒலிம்பிக் தீபம் ஏற்றும் நிகழ்ச்சி இது வரையில் இல்லாத வகையில், வில்வித்தை வீரர் ஒருவர்தீப்பொறிஅம்பை எய்து ஒலிம்பிக்தீபத்தை ஏற்றி வைத்தார்.

இலங்கை-இந்திய நேரப்படி அதிகாலை இரண்டு மணிக்கு ஸ்பெயின் நாட்டு மன்னர் ஜூவான் கர்லோஸ் ஒலிம்பிக் போட்டியைத்தொடக்கிவைத்தார்.

175 நாடுகளைச் சேர்ந்த 15,000 வீரர் வீராங்கனைகள் இந்த விழாவில் கலந்து கொள்கிறார்கள்.

பல் வைத்திய நிலையமும் வைத்திய ஆலோசனைகளும்

Dental Surgery & Channelled Consultation Centre

மக்கள் சேவை அறிந்து சேவை புரியும் ஒரே நிலையம் யாழ்நகரில் ஆஸ்பத்திரி முன்பாக

பல் வைத்திய நிலையமும், வைத்திய ஆலோசனைகளும்

காது, மூக்கு, தொண்டை, தோல் வியாதிகள், கருப்பைக் கோளாறு, மகப்பேறு காணும் தாய்மார்களுக்கான விசேட சேவைகள், இவற்றுக்கான ஆலோ

பெறுகின்றன.

## ஆங்கில - சிங்கள மொழிபெயர்ப்பாளர்கள் தேவை

சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கக் கூடிய மொழிபெயர்ப்பாளர்கள் தேவை. 05 - 08 - 92 க்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விளம்பர இலக்கம் - 160,
மே/பா ஈழநாதம்,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

[2883]

## மரண அறிவித்தல்

### பரமநாதர் பொன்னம்மா

உரும்பராயைப் பிறப்பிடமாகக் கொண்ட பரமநாதர் பொன்னம்மா 25 - 07 - 92 அன்று காலை 7 மணிக்கு காலமானார் இவர் காலஞ்சென்ற சி. பரமநாதரின் (கச்சேரிச் சின்னத்துரை) அன்பு மனைவியாரும், சோமசுந்தரம் (கனடா), மகேஸ்வரி (உரும்பராய் தனியார் கல்வி நிறுவன இயக்குனரும், ஆசிரியரும்), காலஞ்சென்ற விக்கினேஸ்வரன் மற்றும் விக்கினேஸ்வரி (இந்தியா), றஞ்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சோ. பாக்கியலக்ஷ்மி (கனடா), கலைஞர் வி. நாகலிங்கம் (இந்தியா) க. சிவானந்தன் (அரச நில அளவையாளர் வவுனியா) ஆகியோரின் மாமியாரும், சோ. நக்கீரன் (கனடா), சோ. இளங்கீரன் (கனடா) ஆகியோரின் பேத்தியாருமாவார். அன்னாரின் பூதவுடல் நேற்று 25-07-92 மாலை 4 மணிக்கு உரும்பராய் வேம்பன் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
உரும்பராய். து. மகேஸ்வரி
(மகள்)
(2894)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கள், விளக்குகள், விருதுகள், தாம்பாளங்கள், அரும்காட்சிப் பொருட்கள், ஏட்டுச்சுவடிகள், சான்றிதழ்கள், தேடக்கிடைத்தற்கரிய பிரசுரங்கள், புத்தகங்கள், பழைமையான வாத்தியக் கருவிகள், ஓவியங்கள், நாணயங்கள், செப்பேடுகள், தமிழரின் பண்பாட்டுச் சின்னங்களைப் பிரதிபலிக்கும் வேறு பொருள்கள் முதலியவற்றைத் தமிழீழ மக்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

மக்களிடமிருந்து பெறப்படும் பொருள்கள் யாவும் சிதைவுறாது காப்பாற்றி மீள ஒப்படைக்கப்படுவதில் மிகச் சிரத்தைஎடுக்கப்படும். எனவே தமிழீழ மக்களிடமிருந்து பெரியளவில் எதிர்பார்க்கப்படும் இந்தப் பொருள்களைக் கண்காட்சியில் வைப்பதற்காகவும் புலர் கண்டுகளிக்க வாய்ப்பு அளிப்பதற்காகவும்விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக நடுவப் பணியகத்தில் மனமுவந்து ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

காலத்தின் தேவையான இந்தக் கண்காட்சியின் வெற்றிக்கு அனைத்து மக்களுடைய பங்களிப்பையும் வேண்டி நிற்கின்றோம். பொருள்களை ஒப்படைப்போர் கோண்டாவிலில் உள்ள விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழக நடுவப்பணியகத்தில் ஒப்படைத்து அதற்கான உறுதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஜே. வி. பியின்

கையில்; மீண்டும் ஒரு கிளர்ச்சி ஏற்படாத வகையில் காத்திரமான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் எனவும் பொலிசார் இது விடயத்தில் மிக விழிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

### யுத்தம்

ஈடுபடுதல் ஆகிய ஜனநாயக அடிப்படைஉரிமைகளை மறுக்கிறது. இச் சட்டங்கள் குறித்து சர்வதேச மட்டத்தில் அக்கறை காட்டப்படுவதாகவும் பாலா தம்பு தெரிவித்துள்ளார்.

### துர்நாற்றம்

(மண்டைதீவு)

யாழ். கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள வடிகால்கள் அடைபட்டு கழிவு நீர் தேங்கி பல நாட்களாக துர்நாற்றம் வீசுவதாக கஸ்தூரியார் வீதி கடைச்சிப் பந்திகள் கூறுகிறார்கள். (88)

### குடும்பத்தகராறு சுருக்கிட்டு தற்கொலை

(நவாலி)

குடும்பத் தகராறு காரணமாகக் குடும்பஸ்தர் ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்ட சம்பவம் ஒன்று நவாலிப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

தற்கொலை செய்து கொண்டவர் நவாலியைச் சேர்ந்த கந்தசாமி மாணிக்கராசா (வயது 55) என அடையாளம் காணப்பட்டுள்ளது. நேற்றைய தினம் யாழ். போதனாவைத்திய சாலையில் இவரது சடலம் வைத்திய பரிசோதனைக்குட்படுத்தப்பட்டபின் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (க, ச)

### டிப்ளோமா

10-ம் திகதி வெளியானவர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

### வெலிக்கடை

மணி மற்றும் எமது இயககத் தூண்களானதாமு கந்தையா, சிவானந்தராசா, சத்தீஸ்வரன் உட்பட்ட அனைவருக்கும் சிரம்தாழ்த்தி வணக்கம் செய்வோம்.

இவ்வீரர்களை நினைவு கொள்ளுமுகமாக 27ஆம்திகதி மாலை 7.00 மணிக்கு கோப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த ஆவரங்கால் நடராசா இராமலிங்க மகாவித்தியாலய அரங்கில் நடைபெறவுள்ள கூட்டத்தில் தமிழீழ மக்களை கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ணப்பங்களைக் கோரியுள்ளது. ஜப்பானிய அரசு வழங்கும் பட்டப்பின் ஆராய்ச்சிக்கான புலமைப் பரிசிலுக்கான விண்ணப்பங்களும் தகுதியானவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதாக கல்வி, உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

### கல்விக் கருத்தரங்கும் நூல் வெளியீடும்

வேலணைக் கல்விக் கோட்ட கணித விஞ்ஞான ஆசிரியர் மன்றம் நடத்தும் கல்விக் கருத்தரங்கும் 'அறிவு' சஞ்சிகை வெளியீட்டு விழாவும் எதிர் வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2-30 மணி தொடக்கம் யாழ். கந்தர்மடம் யூனிவேர்சல் கல்வி நிலையத்தில் நடைபெறும். கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. க. சின்னத்தம்பி வேலணை கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளருமான திரு. சி. புலேந்திரன் அவர்கள் நிகழ்த்துவார் (22)

### சிறிலங்கா

இராணுவத்தில் சேவையிலிருந்து விலகியோடியவர்களுக்கும் எதிராக ஒழுங்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட மாட்டாது என்று அண்மையில் இராணுவத் தலைமையகம் அறிவித்தது தெரிந்ததே.

### இனக்கலவரத்தை

றது.

அத்துடன் தந்திரிமலையில் பௌத்தவிகாரைக்குள் நடந்த குண்டுவெடிப் பின்போது கொல்லப்பட்ட பௌத்தகுரு மீது சிங்கள மக்கள் பெரும் நல்லபிப்பிராயம் கொண்டிருந்தனர். பிக்குவைக் கொலை செய்வதன் மூலம் தமிழ்மக்கள் மீது வன்முறையை அரசாங்கம் தூண்டுவதுபோல் உள்ளது இதேவேளை, இக் குண்டு வெடிப்பு இராணுவ முகாமிற்குள் இருந்த விகாரைக்கொன்றில், அதுவும் சிங்களவர் சூழவுள்ள பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதனைப் புலிகள் செய்திருக்கலாம் என்பதற்கு ஆதாரம் எதுவுமில்லை எனவும் பி.பி.ஸி. தெரிவித்தது.

காது, மூக்கு, தொண்டை, தோல் வியாதிகள், கருப்பைக் கோளாறு, மகப்பேறு காணும் தாய்மார்களுக்கான விசேட சேவைகள், இவற்றுக்கான ஆலோசனையுடன் உடனடி சிகிச்சை அங்கும் இங்கும் அலையாது உங்கள் வைத்திய நிபுணர்கள் உங்கள்நோய்தீர ஆலோசனையுடன், உடனடி சிகிச்சையும் வழங்குகின்றார்கள்.

பல் வைத்திய நிலையமும்,
வைத்திய ஆலோசனைகளும்
பல் வியாதிய ல் அவதியுறும் உங்களுக்கு
இதோ ஓர் நற்செய்தி!

உங்கள் பற்களில் ஏற்படும் வியாதிகளை, விசேட பல் வைத்திய நிபுணர்களைக்கொண்டு பார்வையிடவும், பல் கழற்றுதல், பல் அடைத்தல். அத்துடன் வைத்திய நிபுணர்களின் நேரடிக்கவனிப்பில் குறைந்த நாள் தவணையில் பல் கட்டிக்கொள்ள இதோ முகவரி:-

பல் வைத்திய நிலையமும்,
வைத்திய ஆலோசனைகளும்
இல. 484, ஆஸ்பத்திரி வீதி,
(ஆஸ்பத்திரி முன்பாக (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

விளம்பர ஆக்கம்: ஷண் அட்வடைசிங் சேவிஸஸ், யாழ்நகர்.

[சி 4714]

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

25-07-1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 4996

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
26-4586, 40-2573, 47-8629, 28-7497, 26-5058, 41-9396, 22-6073, 27-8149, 28-3306, 24-7087, 28-1062, 24-9501, 26-3046, 24-2288, 24-5886, 27-4101, 25-7772, 25-3708.

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகனஇலக்கங்கள்:-
28-2049. 40-7584 26-4393, 24-5777, 27-1494, 27-9083. 28-1992, 27-9489, 27-7003, 26-506, 22-6746, 26-0338. 28-3289, 42-2802, 28-2511.